# இன்னாநாற்பது உணர்த்தும் வாழ்வியல் நெறி

***சை. பல்கீஸ்அன்பியா***
உதவிப் பேராசியர் (தமிழ்த்துறை)
இரத்தினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,(தன்னாட்சி)
கோயம்புத்தூர்

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

## முன்னுரை

அறிவில் முதிர்ந்த சான்றோர்கள் தங்கள் அனுபவங்களை இலக்கியமாக்கி, வழி வருவோர் வருத்தமின்றி வாழ வாழ்க்கைத் தடத்தை செம்மையுற அமைத்துள்ளனர். இவ்வாறு வாழ்தல் இன்பம் தரும். இவை இவை செய்தல் துன்பம் தரும். தீமை விளைவிக்கும் என்றெல்லாம் குழந்தைகளுக்கு அறிவுரை கூறும் தாயைப் போல அறிவுரைப் புகட்டிச் சென்றுள்ளனர். அற இலக்கியங்களுள் ஒன்றான இன்னாநாற்பது அறிவுக் களஞ்சியமாய் வாழ்க்கையின் தத்துவத்தை அனைவருக்கும் எடுத்து இயம்புகிறது. வாழ்வில் தோன்றும் அனைத்துவகையான சிக்கல்களுக்கும் காரணகாரியமாய் இருப்பவற்றை அறிந்து அவற்றைக் களைய முற்படுதல்மூலம் இனிமையான வாழ்க்கையை வாழ முடியும். நாம் மட்டுமின்றி நம்மைச் சார்ந்தவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருத்தல் அவசியமானதாகும். இன்னா நாற்பதில் கபிலர் பெருமானார் எவற்றை விடுத்து வாழ்வில் இன்பமடையலாம் என்னும் வாழ்வியல் நெறியினை விரித்துரைத்துள்ளார்.

## இன்னாநாற்பது என்னும் இலக்கியப் பேழை

இவ்வுலகில் தோன்றிய அனைத்து உயிரினங்களும் நிறைவு அடைவதைக் குறிக்கோளாய் கொண்டு இயங்குகின்றன. மனித உயிர்கள் மட்டுமே வரையறைக்கு உட்பட்டு வாழ்க்கை நெறியைத் தங்களுக்கு உரித்தாக்கி வாழ்ந்துகொண்டிருக்கிறது. தம் அனுபவங்களைப் பிறருக்குக் காட்டி வாழ்க்கைநெறியை இன்னாநாற்பது மூலம் புகட்டியுள்ளார் கபிலர். இன்னாநாற்பது என்னும் இலக்கியச் சோலை புக்கள் நிறைந்த தோட்டம்போல வாழ்க்கை அமைவதற்கு இவையெல்லாம் செய்தல் துன்பம் விளைவிக்கும் ஆதலால் அவற்றைவிட்டு விலகி இருங்கள் என அறிவுரை பகர்கிறது.

### மனையுறை மகளிர் செய்ய இயலாத மாண்புகள்

இல்லற வாழ்க்கையை மனைவியானவள் எவ்வாறு வழி நடத்திச் செல்ல வேண்டும், தான் செய்யும் தவறு தன்னை சார்ந்தவரையும் பாதிக்கும் என்பதை கருத்தில்கொண்டு வாழ்தல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் துன்பமே விளைவாகும் என்று இன்னா நாற்பது கூறுகிறது. எக்காலமாயினும் பெண்கள் மட்டுமே குடும்பத்தை சிறப்பாக்க இயலும். அத்தகைய பெண்ணானவள் தன் கணவனுக்கு அடங்கி வாழ்தல் வேண்டும் என்பதை, "**ஆர்த்த மனைவி அடங்காமை நற்கு இன்னா**"[1] என்று கூறுகிறது. அஃதாவது அடங்காத மனைவி அமைந்து விட்டால் வாழ்க்கையில் துன்பமே கிடைக்கும். இதனை பெண்ணிய நோக்கில் அணுகாமல் ஒரு தலைமுறைக்கு வழிகாட்டும் வழிகோளாய் கொள்ள வேண்டும். "**உடம்பாடு இல்லாத மனைவி தோள் இன்னா**"[2] என்று குறிப்பிடும் போது உள்ளம் பொருந்தாத மனைவிதன், கணவனுக்கு உறுதுணையாய் அமைய மாட்டாள் என்பதை உணர்த்துகிறது.

### அறிதல், புரிதல்

கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்து புரிந்து வாழ்தல் வேண்டும். அறிதல் புரிதல் இல்லாத வாழ்க்கை வளமான மண் இருந்தும் காய்க்காத மரம் போல் ஆகும். இதனை "**இன்னா உணர்வார் உணராக்கடை**"[3] என இன்னா நாற்பது கூறுகிறது. அது மட்டுமின்றி ஏற்ற இறக்கங்களை பொறுத்துக்கொண்டு வாழ்க்கைப் படகை செலுத்துவதில் மனைவியானவள் கணவனுக்குத் துடுப்பைப்போல் இருத்தல் வேண்டும். ஆடம்பர வாழ்க்கைக்காக வாழ்க்கைத்துணையை விட்டு வேறு வாழ்க்கையைத் தேடும் மகளிரை இன்றைய சமூகச் சூழலில் நாம் காண்கிறோம். ஆக "**நோன்று அவிந்து வாழாதார் நோன்பு இன்னா**"[4] என்று கூறுகிறது. இன்பத் துன்பங்களைப் பொறுத்து மனம் அடக்கி வாழாதார் வாழ்க்கை துன்பத்தையே தரும்.

### நாணத்தின் திறவுகோல்

உலகம் தோன்றிய நாள் முதலாய் நாணம் என்னும் பண்பு பெண்களுக்கே உரித்தானது ஆகும். ஆனால் அரை நாகரிகத்தால் அரையாடை உடுத்தி நாணம் என்னும் பண்பை சிலர் மறக்கின்றனர். "நலத்தகையார் நாணாமை இன்னா"[5] என்பதன் வழி உணர்த்துகிறது. வெட்கம் கொள்ளாமை பெரும் துன்பத்தையே ஏற்படுத்தும். ஆதலால் அத்தகைய பண்பை பின்பற்றி வாழ்தல் நன்மை பயக்கும்.

### மருந்தாகிய காமம்

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளுக்கும் காமம் என்ற உணர்வு பொதுவானதுவே. ஆனால் இன்றையச்சூழல் அத்தகைய உணர்வைப் பெண்ணிணத்திற்கு எதிராகத் திருப்பிப் பெண்ணிணத்திற்கு அச்சுறுத்தலாய் அமைகிறது. நாகரிகம் தரைமட்டமாகிக் கொண்டிருக்கும் அவநாகரிகத்தில் நடந்து கொண்டிருக்கிறோம். காமம் என்பது விளக்கில் எரியும் ஒளியாய் இல்லாமல் பற்றி எரியும் நெருப்பாய் அமைவதால் இளம் பெண் சிசுக்களும் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஆக "**காமம் முதிரின் உயிர்க்கு இன்னா**"[6] என்பது காமவெறியின் விளைவைப் பற்றிக் கூறுகிறது. அதுமட்டுமின்றி "பிறன் மனையாள் பின் நோக்கும் பேதைமை இன்னா"[7] என்னும் பிறர் மனைவியை விரும்புவதால் ஏற்படும் சீர்கேட்டினை விளக்குகிறது. இத்தகைய அறிவீனமான செயல் துன்பத்தை விளைவாகக் கொடுக்கும்.

**ஈகை என்னும் உயர்ந்த நெறி**

முற்காலத்தில் ஈகை என்னும் உயர்ந்த பண்பு ஒவ்வொரு மனிதர் மனதிலும் குருதியெனப் பரவி இருந்தது. இரப்போர்க்கு உணவளிப்பதை உயிரெனக் கருதினர். இரப்போர்க்கு மனம் மகிழ்ந்து வழங்குதல் வேண்டும். “**வண்மை இலாளர் வனப்பு இன்னா**”[8] என்று ஈகைக் குணம் இல்லாதவர்களின் அழகு துன்பத்தைத் தரும் எனக் கூறுகிறது. அதைப்போலவே இரக்கக் குணம் இல்லாதவர்களிடம் சென்று யாசிப்பதும் துன்பத்தையே ஏற்படுத்தும் என்பதை, “**அருள் இல்லார்தம் கண் செலவு இன்னா**”[9] என்று சுட்டிக் காட்டுகிறது. ஆனால் இன்றைய வாழ்க்கைச் சூழலால் அத்தகைய உயரிய நெறியை மாற்றி சுயநலம் என்னும் முக மூடியில் நம்மை ஒளித்து வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

மற்றவர்களின் துன்பம் அறிந்து அவர்களுக்கு உதவ வேண்டும் என்னும் உயரிய குணம் கொண்டவர்களிடம் வறுமை காரணமாய் கொடுக்க இயலாமையும் பெரும் துன்பத்தை ஏற்படுத்தும் என்பதை “**இடும்பை உடையார் கொடை இன்னா**”[10] எடுத்துரைக்கிறது.

**முடிவுரை**

இன்னா நாற்பது வெறும் இலக்கியமாய் மட்டுமின்றி வாழ்கைப் பாதையை செம்மையுற அமைத்துத் தரும் வாழ்க்கைக் களஞ்சியமாகும். இன்றைய காலக் கட்டத்தில் ஏற்படும் சமூக அவலங்கள் அனைத்தையும் நோக்கும்போது வாழ்வியல் புரிதல் இல்லாமையே காரணமாய் அமைகின்றது. சமூகத்தின் அடிப்படை குடும்பம் ஆகும். குடும்பம் சீராக அமையும் போது சமூகம் செம்மையுறும் என்னும் அடித்தளத்தை மையமாகக்கொண்டு ஒவ்வொருவரும் இயங்க வேண்டும். அத்தகைய மையத்தை ஏற்படுத்திக் கொடுப்பது இன்னா நாற்பது போன்ற அற இலக்கியங்களே ஆகும்.

**குறிப்பு**

1. இன்னா நாற்பது, (பா.2:2).
2. இன்னா நாற்பது, (பா.11:1).
3. இன்னா நாற்பது, (பா.14:4).
4. இன்னா நாற்பது, (பா.17:3).
5. இன்னா நாற்பது, (பா.19:4).
6. இன்னா நாற்பது, (பா.24:3).
7. இன்னா நாற்பது, (பா.38:1).
8. இன்னா நாற்பது, (பா.9:3).
9. இன்னா நாற்பது, (பா.10:3).
10. இன்னா நாற்பது, (பா.6:3).